# காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சி

நாள்: **21.10.2009**

<u>**சாதாரணக் கூட்டம்**</u>

காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சியின் சாதாரணக் கூட்டம் 28.10.2009-ம் தேதி புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு நகராட்சி மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நகர் மன்ற தலைவர் திரு. வாவு சா. செய்யிது அப்துர் ரஹ்மான் அவர்கள் தலைமையில் நடைபெறும். எனவே உபதலைவர் மற்றும் உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் எண்: 1**

நகராட்சிப் பகுதி 15-வது வார்டு சீதக்காதி நகர், மங்கள விநாயகர் கோவில் தெரு இணைப்பு சாலைகள் 4 மண் சாலைகளாக உள்ளன. அதனை மேம்படுத்தி சிமெண்ட் சாலை அமைத்துத் தரவும் மற்றும் டிரைவர் காலனியின் மண் சாலைகளாக உள்ள சுமார் 100 மீட்டர் நீளமுள்ள சாலைகளை தார் சாலையாக அமைத்துத்தர கேட்டுக் கொண்ட 15-வது வார்டு உறுப்பினர் திரு.P.கணேசன் பால்ராஜ் என்பவரின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**செயல் அலுவலர் குறிப்பு :-**

தலைவர் உறுப்பினர் ஸ்தலப்பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி செய்திட மன்றம் அங்கீகரிக்கலாம்

**பொருள் எண்: 2**

காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சிக்குட்பட்ட கற்புடையார்பள்ளி வட்டம் பகுதியில் கடல் மீன் பிடிக்கும் தொழில் செய்பவர்களுக்கு மீன்வளத்துறை மூலம் மாதிரி கிராமத் திட்டத்தின்படி 2004-ம் ஆண்டு 25 குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதில் 15 குடும்பங்கள் தங்கள் வீடுகளுக்கு சொத்து வரி விதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி வீடுகளுக்கு மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு ஆகியவை பெற்றுள்ளார்கள். மீதமுள்ள 10 வீட்டுக்குறியவர்கள் இது விபரம் தெரியாமல் வீடுகளுக்கு வீட்டுத் தீரவை எதுவும் எடுக்காமல் விட்டு விட்டபடியால் மின்சாரம், குடிநீர் இணைப்பு ஏதுவுமில்லாமல் படிக்கும் குழந்தைகளுடன் சிரமப்படுகிறார்கள் எனவும், மீன்வளத்துறை மூலமாக பெறப்பட்ட ஆவணங்களுடன் விண்ணப்பித்துள்ளனர். ஆகவே ஆவணங்கள் சரிபார்த்து 10 வீடுகளுக்கு வீட்டு வரி தீர்வை வழங்குவது தொடர்பாக செயல் அலுவலர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**செயல் அலுவலர் குறிப்பு :-**

பார்வையிட்டு மன்றத்தின் முடிவிற்கு.

**பொருள் எண்: 3**

காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சி பொது நிதித் திட்டப் பணிகள் 2009-10-ன் கீழ் கண்ட பணிகள் செய்ய 23.09.2009 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்படபட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பீடு (இலட்சத் தில்) | ஒப்பததகாரர் பெயர் / முகவரி | ஒப்பந்த வகை |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிப்பகுதி கீழ லெட்சுமிபுரம் மேலத்தெரு சாலையை மேம்பாடு செய்தல் | 5.30 | திருமதி.முனவ்வரா, காயல்பட்டணம். | 0.35% கூடுதல் |
| | | | திரு.குமரேசன், திருச்செந்தூர் | 0.03% குறைவு |
| 2. | நகராட்சிப்பகுமி எல்.எப்.சாலை எதிர்புறம் | 1.40 | திருமதி.முனவ்வரா, | 0.06% |

| | | | | |
|---|---|---|---|---|
| | (ஜெயிலானி நகர்) குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் | | காயல்பட்டணம். | குறைவு |
| | | | திரு.குமரேசன், திருச்செந்தூர் | 5.14% கூடுதல் |
| 3. | நகராட்சிப்பகுதி கோமான் கீழத் தெரு சாலையை மேம்பாடு செய்தல் | 4.70 | திருமதி.முனவ்வரா, காயல்பட்டணம். | 1.06% கூடுதல் |
| | | | திரு.குமரேசன், திருச்செந்தூர் | 0.07% குறைவு |
| 4. | நகராட்சிப்புதி 15-வது வார்டுக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் | 1.30 | திரு.தலவாணிமுத்து, பூந்தோட்டம். | 0.20% குறைவு |
| | | | திருமதி.தங்கப்பூ காயல்பட்டணம் | 3.89% கூடுதல் |
| 5. | நகராட்சிப்புகுதி புதிய பேருந்து நிலைய மெயின் குடிநீர் குழாயிலிருந்து ஓடக்கரை முனியசாமி கோவில் தெரு மேலல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு மெயின் குடிநீர் குழாய் இணைப்பு (பம்பிங்) வசதி செய்தால் | 1.80 | திரு.தலவாணிமுத்து, பூந்தோட்டம். | 0.73% குறைவு |
| | | | திருமதி.தங்கப்பூ காயல்பட்டணம் | 3.13% கூடுதல் |

வரப் பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ரேட் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்க.

**செயல் அலுவலர் குறிப்பு :-**

குறைந்த ரேட் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள் எண்: 4**

காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2009-10-ன் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 23.09.2009 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| **வ. எ ண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு (இலட்சத் தில்)** | **ஒப்பதததகாரர் பெயர் / முகவரி** | **ஒப்பந்தவ கை** |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சிப் பகுதியாகிய ஓடக்கரை மயான சாலை தார் சாலை அமைத்தல் | 5.65 | திரு.தலவாணிமுத்து, பூந்தோட்டம். | 0.07% குறைவு |
| | | | திருமதி.தங்கப்பூ காயல்பட்டணம் | 0.36% கூடுதல் |

வரப் பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ரேட் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்க.

**செயல் அலுவலர் குறிப்பு :-**

குறைந்த ரேட் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள் எண்: 5**

காயல்பட்டணம் நகராட்சியில் 12-வது நிதிக்குழு திட்டம் 2008-09-ன் கீழ் புதியதாக வாங்கப்பட்ட மினிலாரிக்கு டிப்பர் வசதி செய்ய 23.09.2009 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பததகாரர் பெயர் / முகவரி | ஒப்பந்தவகை |
|---|---|---|---|---|
| 1. | காயல்பட்டணம் நகராட்சியில் புதியதாக வாங்கப்பட்ட மினிலாரிக்கு இரண்டு ஹைட்ராலிக் ஜாக்கியுடன் கூடிய டிப்பர் வசதி செய்தல் | 2.35 | டி.வி.சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் லிட், திருநெல்வேலி. | மதிப்பீடு ரேட் ரூ.235000 |
| | | | S.C.M. ஹைட்ராலிக்ஸ், திருநெல்வேலி. | மதிப்பீடு ரேட்டை விட கூடுதல் ரூ.248000 |

வரப் பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ரேட் கொடுத்துள்ள டி.வி.சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ், திருநெல்வேலி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை, திட்டப் பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் அதற்குறிய செலவுத் தொகை ரூ.2,84,683.00 திட்ட ஒதுக்கீட்டிலிருந்து வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்க அனுமதிக்கு.

**செயல் அலுவலர் குறிப்பு :-**

குறைந்த ரேட் கொடுத்துள்ள டி.வி.சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ், திருநெல்வேலி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள் எண்: 6**

காயல்பட்டணம் நகராட்சிக்கு வரக்கூடிய குடிதண்ணீரை அளவிடுவதற்காக அளவிடும் கருவி பொருத்தி அதனை பாதுகாக்க பாதுகாப்பு அறை கட்டும் வேலைக்கு 16.09.2009 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப் பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பததகாரர் பெயர் / முகவரி | ஒப்பந்தவகை |
|---|---|---|---|---|
| 1. | காயல்பட்டணம் நகராட்சியில் உச்சினிமாகளியம்மன் கோவில் தெருவில் தண்ணீர் அளவிடும் கருவி பொருத்துதல் மற்றும் பாதுகாப்பு அறை கட்டுதல் | 2.50 | திரு.குமரேசன், திருச்செந்தூர் | 0.02% குறைவு |
| | | | திருமதி.முனவ்வரா, காயல்பட்டணம். | 9.00% கூடுதல் |

வரப் பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ரேட் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்க.

**செயல் அலுவலர் குறிப்பு :-**

குறைந்த ரேட் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள் எண்: 7**

காயல்பட்டணம் நகராட்சி 18-வது வார்டுக்குட்பட்ட மஹலரா காலனியில் தார் சாலை அமைக்கவும் மேலும் முத்தாரம்மன் கோவில் தெரு, சேதுராஜா தெரு மற்றும் கோமான் தெரு ஆகிய தெருக்களுக்கு பொது மயான சாலையையும் தார்சாலையாக அமைத்துத்தர கேட்டுக் கொண்ட 18-வது வார்டு உறுப்பினர் S.காசிராஜன் என்பவர் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் .

**செயல் அலுவலர் குறிப்பு :-**

தலைவர் உறுப்பினர் ஸ்தலப்பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி செய்திட மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள் எண்: 8**

காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் பணிக்காக (கம்போஸ்ட்யார்டு) உரக்கிடங்க்கு வாங்குவாற்காக பகுதி – 2 திட்டத்தின் கீழ் மான்யமாக ரூ. 5.00 லட்சம் வழங்கப்பட்டுள்ளது அதற்காக நிலம் வாங்க புல எண்:- 278-ல் ஐந்து ஏக்கர் நிலம் வாங்குவதற்கு அதன் உரிமையாளர் திருமதி W.S.A.R.கதீஜத்துல் பாத்திமா அவர்கள் ஏக்கர் ரூ. 1.00 லட்சம் வீதம் காயல்பட்டணம் நகராட்சிக்காக வழங்க சம்மதித்து உரிய ஒப்பந்தம் செய்து கொடுத்துள்ளார், மேற்காணும் புல எண்:-278-ல் அரசு வழிகாட்டுதல் விபரப்படி ஒரு ஹெக்டேர் 144500/- எனவுள்ளதால், ஏக்கர் மதிப்பீடு சுமார் ரூ. 59000/- ஆகவுள்ளது தற்பொழுது வெளிமார்கெட் விபரப்படி ஏக்கர் 1-க்கு ரூ 1.50 லட்சமாக உள்ளது. காயல்பட்டணம் நகர் நலன் கருதி மேற்கண்ட நில உரிமையாளர் காயல்பட்டணம் நகராட்சிக்கு ஏக்கர் 1-க்கு ரூ. 1.00 லட்சம் வீதம் வழங்க சம்மதித்துள்ளார். மேற்படி நிலத்தை தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அனுமதிக்கு சமர்ப்பித்து உத்திரவு பெற்று திருமதி.W.S.A.R.கதீஜத்துல் பாத்திமா அவர்களிடம் 5 ஏக்கர் நிலத்தை காயல்பட்டணம் நகராட்சிக்கு ரூ.5.00 லட்சத்திற்க்கு உரக்கிடங்கு வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**செயல் அலுவலர் குறிப்பு :-**

உரக்கிடங்கு வாங்குவதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள் எண:- 9**

காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதிக்குட்பட்ட 13-வது வார்டு விசாலாட்சியம்மன் கோவில் தெருவில் இசக்கியம்மன் கோவில் கோவில் பின்புறம் 100 மீட்டா பைப்லைன் அமைத்துத் தருமாறு கேட்டுக் கொண்ட 13-வது வார்டு உறுப்பினர் திரு.M.N.செளுக்கு அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**செயல் அலுவலர் குறிப்பு:-**

குடிநீர் பணி என்பதால் குடிநர் நிதியிலிருந்து செலவு செய்திட மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள் எண்:- 10**

காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதிக்குட்பட்ட 13-வது வார்டு மக்களுக்கு காயல்பட்டணம் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள மேநிலை நீர் தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் விநியோம் செய்யப்பட்டு வரப்படுகிறது, மேற்படி மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியிலிருந்து சுமார் 55 வருடங்கள் பழைமை வாய்ந்த லைன் பழுது பட்டு நொருங்கி குடிநீர் சரியாக விநியோகிக் முடியாமல் ஒரு வீட்டிற்கு 5 குடம் கிடைப்பதே அரிதாக உள்ளது. எனவே மேற்படி AC குடிநீர் குழாயை அகற்றிவிட்டு புதிதாக பி.வி.சி குழாய் அமைத்து குடிநீர் சரிவர விநியோகிக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொண்ட 13-வது வார்டு உறுப்பினர் திரு.M.N.சொளுக்கு அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**செயல் அலுவலர் குறிப்பு:-**

இரண்டாவது குடிநீர் திட்டத்தில் நகராட்சி பகுதிகளிலுள்ள பழுதுப்பட்ட பிரதான AC குழாய்களை மாற்றி புதிய குழாய்கள் பதிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளதால் திட்டம் நடைபெறும் பொழுது குழாய்களை மாற்றிட மன்றம் தீர்மானிக்கலாம்.

**பொருள் எண்:- 11**

காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதிக்குட்பட்ட 7-வது வார்டு கற்புடையார் பள்ளி வட்டம், கீழநெய்னார் தெரு பகுதியில் உள்ள மின்கம்பங்களுக்கு தெரு விளக்குகள் இல்லாமல் உள்ளது எனவே தெருவிளக்கு பொருத்தி தர கேட்டுக் கொண்ட 7-வது வார்டு உறுப்பினர் திரு.S.I.ரபீக் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**செயல் அலுவலர் குறிப்பு:-**

திருச்செந்தூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நிதியிலிருந்து அளித்துள்ள 200 குழல்விளக்கு மற்றும் 100 CFL விளக்குகள் பெருத்தப்பட வேண்டியுள்ளது. மேற்கண்ட பகுதிகளுக்கு இவைகளிலிருந்து தேவையானவற்றிற்கு மின்விளக்கு பொருத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்:- 12**

காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதிக்குட்பட்ட 8-வது வார்டு சுலைமான் நகர் மாட்டுக்குளம் பகுதியில் வரும் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி வருவது வழக்கமாகவுள்ளது. எனவே மழை நீர் தேங்கியுள்ள பகுதியில் நெடுஞ்சாலையில் இருபுறமும் உள்ள மண் குவியலை நகராட்சி லாரி மூலம் மண் எடுத்து பள்ளத்தில் நிரப்பும் படி கேட்டுக் கொண்ட 8-வது வார்டு உறுப்பினர் திரு.S.M.அகமது பரீதா அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**செயல் அலுவலர் குறிப்பு:-**

காயல்பட்டனம் நகராட்சி சுகாதாரபணிக்கு லாரிகள் தேவைபடுவதால் நகராட்சி லாரி மூலம் இப்பணி செய்ய இயலாது. ஆகவே இப்பணி செய்ய ஒப்பந்தபுள்ளி கோரி பணி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்:- 13**

காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதிக்குட்பட்ட 1-வது வார்டு கடையக்குடி மற்றும் அருணாசலபுரம் தெற்கு தெரு ஆகிய இடங்களில் சுமார் 500 மீட்டர் தூரம் புதிய குடிநீர் குழாய் குடிநீர் நிதியிலிருந்து அமைத்துத்தரவும், கேமான் மேலத் தெரு ஆரம்பசுகாதாரநிலையம் அருகில் சுமார் 200 மீட்டர் தூரம் தார்சாலை அமைத்திடவும் கேட்டுக் கொண்ட 1-வது வார்டு உறுப்பினர் திரு.தா.திருத்துவராஜ் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**செயல் அலுவலர் குறிப்பு:-**

குடிநீர் பணியினை குடிநீர் நிதியிலிருந்து செய்திடவும் சாலை பணியினை தலைவர் உறுப்பினர் ஸ்தலப்பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி செய்திடவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள் எண்: 14**

காயல்பட்டணம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2009-10-ன் கீழ் லெட்சுமிபுரத்தில் ஊட்டச் சத்து மையம் கட்டிடம் கட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதில் அனுமதிக்கப்பட்ட தொகையை விட கூடுதலாகவும் நிதியை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் நகராட்சி மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று புள்ளி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கவும், மேற்படி பணிக்கு 07.10.2009 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப் பெற்றுள்ளன.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பததகாரர் பெயர் / முகவரி | ஒப்பந்தவகை |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சிப பகுதி லெட்சுமிபுரத்தில் ஊட்டச்சத்து கட்டிடம் கட்டுதல் | 3.15 | திரு.குமரேசன், திருச்செந்தூர் | 0.21% குறைவு |
| | | | திருமதி.முனவ்வரா, காயல்பட்டணம். | 31.12% கூடுதல் |

வரப் பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ரேட் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்க.

**செயல் அலுவலர் குறிப்பு :-**

குறைந்த ரேட் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள் எண்: 15**

காயல்பட்டணம் நகராட்சிப் பகுதியாகிய ஒடக்கரை பகுதிகளில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்ய நகர் மன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டு கோளின்படி நகராட்சி பொறியாளர் அவர்களால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 1.00 இலட்சத்தை (3'' PVC குழாய் 860 மீட்டர்), பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதைத் அங்கீகரிக்க.

**செயல் அலுவலர் குறிப்பு :-**

நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்றதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள் எண்: 16**

காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட கற்புடையார்பள்ளி வட்டத்தில் குடிநீர் குழாய் பொதுக்குழாய் விஸதரிப்பு செய்ய வேண்டும் என்ற நகர் மன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளின்படி நகராட்சி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சிப் பொறியார் அவர்களால் தயாரிக்கப்பட்ட (2'' PVC குழாய்) தோராய நீளம் 300-மீட்டருக்கான உத்தேச மதிப்பீடு ரூ. 30000/- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**செயல் அலுவலர் குறிப்பு :-**

நகராட்சி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியார் அவர்களால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**பொருள் எண்: 17**

காயல்பட்டணம் நகராட்சி காலியிடங்களுக்கு வரி விதிப்பு செய்யக் கோரி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கள் துறை அரசானை எண்:- 150 நாள்:- 20.08.2009 மற்றும் அதனை அமல்படுத்தக் கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு மற்றும் மண்டலம் வாரியாக தொகையினை நிர்ணயம் செய்ய மன்த்தின் முடிவிற்கும்

**செயல் அலுவலர் குறிப்பு :-**

அரசு வழிகாட்டுதலின்படி C Grade குறைந்தபட்ச தொகையை நிர்ணயம் செய்ய மன்றம் முடிவு செய்யலாம்.

| **Vacant Land with reference to its location** | **A Grade** | | **B Grade** | | **C Grade** | |
|---|---|---|---|---|---|---|
| | **Minimum (in Paise)** | **Maximum (in Paise)** | **Minimum (in Paise)** | **Maximum (in Paise)** | **Minimum (in Paise)** | **Maximum (in Paise)** |
| (a) Streets in residential area. | 20 | 40 | 15 | 30 | 10 | 20 |
| (b) Main roads and bus route roads other than those which lead to arterial road | 30 | 50 | 20 | 40 | 15 | 30 |
| (c) Arterial roads, main roads and bus route roads which lead to arterial road | 40 | 60 | 30 | 50 | 20 | 40 |

**பொருள் எண்: 18**

காயல்பட்டணம் நகராட்சியில் 12-வது நிதிக்குழுத் திட்டம் 2009-10-ன் கீழ் பணிகள் தேர்ந்தெடுக்க வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு. அதன் படி அரசு வழிகாட்டுதல் நெறிமுறையின்படி ஒதுக்கப்பட்ட நிதியில் 25% சாலைப்பணிக்கும் 50% திடக்கழிவுமேலான்மைத் திட்டத்திற்கும் மீதமுள்ள 25% தொகையை மின் ஆளுமைக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது இதன்படி பணிகள் தேர்ந்தெடுக்க நகர் மன்ற ஒப்புதலுக்கு.

**செயல் அலுவலர் குறிப்பு :-**

பார்வையிட்டு மன்றத்தின் முடிவிற்கு.

**பொருள் எண்: 19**

போக்குவரத்து மேலான்மைத் திட்டத்தின் கீழ் காயல்பட்டணம் நகராட்சியில் பணிகள் தேர்ந்தெடுத்து அறிக்கை சமர்ப்பிக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து மின்னஞ்சல் வரப்பெற்றுள்ளதுகடிதம் மன்றத்தின் பார்வைக்கு. இத்திட்டத்தில் 75% மானியமாகவும் 25% நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி உள்ள நெடுஞ்சாலை (**HIGHWAYS ROAD**) பகுதியான புதிய பேருந்து நிலையத்தின் பேருந்து நுழைவுபகுதி (மேற்கு) அல்ஜாமிவுல் அஸ்ஹர் ஜும்மா மசூதி - ஸி.கஸ்டம்ஸ் சந்திப்பு சாலையின் ஆரம்பத்திலும் இரண்டு உயர் கோபுர மின்விளக்கு (20 மீட்டர் உயரம்) அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 10.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கும், ஒப்புதலுக்கும்.

**செயல் அலுவலர் குறிப்பு :-**

இத்திட்டத்தை 75% மானியமாகவும் 25% நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள் எண்: 20**

காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சிக்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 2008-09, 2009-10 மூலம் 75.00 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்தில் இதர பணிகள் என்ற தலைப்பில் இரண்டு உயர்கோபுர மின்விளக்கு அமைக்க 10.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டது இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி முடிக்கப்பட்டதில் ரூ. 3.04 லட்சம் ஒப்பந்த சேமிப்புத் தொகையாக உள்ளது. ஆகவே இத்தொகைக்கு அழகாபுரி மெயின் ரோட்டிலிருந்து, இரத்தினாபுரி புதிய பேருந்து நிலையம், **ICICI** சந்திப்பு, காயல்பட்டணம் மெயின் ரோடு, **KTM** தெரு, சின்ன நெசவுத் தெரு, திருச்செந்தூர் ரோடு வழியாக ஒடக்கரை கோயில் வரை மெயின் ரோட்டில் உள்ள மின்கம்பங்களில் பொருத்தப்பட்டுள்ள 250W சோடியம் மின்விளக்குகளை அகற்றிவிட்டு அதற்கு பதிலாக 40 எண்ணம் புதிய **CFL(100W)** வெள்ளை சோடியம் குழல் விளக்குகள் பொருத்தலாம். இப்பணிசெய்ய ரூ. 3.04 இலட்சத்திற்கும் கூடுதலாகும் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்திடுமாறு கேட்டுக் கொண்ட நகர் மன்றத் துணைத்தலைவர் **M.A**.கசாலி மரைக்கார் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**செயல் அலுவலர் குறிப்பு :-**

பார்வையிட்டு மன்றத்தின் முடிவிற்கு.

**பொருள் எண்: 21**

காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சி திருச்செந்தூர் – தூத்துக்குடி நெடுஞ்சாலையில் காயல்பட்டணம் தபால் நிலையம் அருகாமையில் (ஆரிப் பெட்டிக்கடை முன்பு) இப்பகுதியில் தான் பேருந்து நிற்குமிடமாகும். இப்பகுதியில் ஒரு இரும்பு மின்கம்பம் (**SS**3 24) போக்குவரத்திற்கு இடையூராக உள்ளது. ஆகவே போக்குவரத்திற்கு இடையூராக உள்ள மின்கம்பத்தினை மாற்றியமைத்திட சம்பந்தப்பட்ட துறைகளை கேட்டுக் கொள்ளுமாறு

கேட்டுக் கொண்ட நகர்மன்றத் துணைத்தலைவர் **M.A**.கசாலி மரைக்கார் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**செயல் அலுவலர் குறிப்பு :-**

மின் கம்பத்தை மாற்றியமைத்திட மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள் எண்: 22**

காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சி திருச்செந்தூர் – தூத்துக்குடி நெடுஞ்சாலையில் காயல்பட்டணம் அழகாபுரி மெயின் ரோட்டிலிருந்து, இரத்தினாபுரி, புதிய பேருந்து நிலையம், **ICICI** சந்திப்பு, காயல்பட்டணம் மெயின் ரோடு, **KTM** தெரு, சின்ன நெசவுத் தெரு, திருச்செந்தூர் ரோடு வழியாக ஓடக்கரை வரை உள்ள ஆக்கிரமிப்புகள் அதிகமாக உள்ளது இவ்வாக்கிரமிப்புகளால் அதிகமான போக்குவரத்திற்கு இடையூராக உள்ளது. ஆகவே ஆக்கிரமிப்புகள் அகற்றிட சம்பந்தப்பட்ட துறைகளை கேட்டுக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்ட நகர்மன்றத் துணைத்தலைவர் **M.A**.கசாலி மரைக்கார் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**செயல் அலுவலர் குறிப்பு :-**

ஆக்கிரமிப்புகளை அகற்றிட சம்பந்தப்பட்ட துறையை கேட்டுக் கொள்ளலாம்.

**பொருள் எண்: 23**

காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சி திருச்செந்தூர் – தூத்துக்குடி நெடுஞ்சாலையில் காயல்பட்டணம் மெயின் ரோடு தபால் அலுவலகம் எதிர்புரம் முதல் அல்ஜாமிவுல் அஸ்ஹர் ஜும்மா மசூதிவரை ஐந்து பட்டுப்போன வேப்ப மரம் போக்குரத்திற்கு இடையூராக உள்ளது. இப்பட்டுப்போன வேப்பை மரங்களை அகற்றிட சம்பந்தப்பட்ட துறைகளை கேட்டுக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்ட நகர்மன்றத் துணைத்தலைவர் **M.A**.கசாலி மரைக்கார் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**செயல் அலுவலர் குறிப்பு :-**

பட்டுப்போன மரங்களை வெட்டி அப்புறப்படுத்திட சம்பந்தப்பட்ட துறையை கேட்டுக் கொள்ளலாம்.

**பொருள் எண்:- 24**

காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சியின் ஆகஸ்ட் - 09 மற்றும் செப்டம்பர் – 09-ம் மாத செலவினங்களை மன்றம் அங்கீகரிக்க.

**செயல் அலுவலர் குறிப்பு:-**

செலவுச் சீட்டை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தலைவர்**
**மூன்றாம் நிலை நகராட்சி**
**காயல்பட்டணம்**